# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No. 100/2025 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 01 ( PW– 01 ) |
| பெயர் | :– | கவிதா |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | சிவக்குமார் |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

**2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 06 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி நேர்நிறுத்தப்பட்டார். எதிரிக்காக இலவச சட்ட உதவி நடுவத்தின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:-**

நான் தொளசம்பட்டியில் நெசவாளர் நகரில் வசிக்கிறேன். தொளசம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணிபுரி -கிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரியை தெரியும். எதிரி என் கணவரின் அத்தை மகன். எங்கள் வீட்டிற்கு அருகில் அவருடைய வீடு உள்ளது. என் கணவர் நான் பணிபுரியும் அதே பள்ளியில் அறிவியல் ஆசிரியராக பணிபுரிகிறார்.

10.10.2024-ஆம் தேதியன்று தொளசம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நானும் என் கணவரும் பணிக்கு சென்றிருந்தோம். மாலை பள்ளி முடிந்து 04.30 மணிக்கு நானும் என் கணவரும் எங்களுக்கு சொந்தமான பதிவு எண் TN 30 V 5870 கொண்ட Hero Honda Splendar Plus இருச் சக்கர வாகனத்தில் வீட்டிற்கு செல்வதற்காக வெளியே வந்தோம். என் கணவர் வாகனத்தை ஓட்டினார். நான் பின்னால் உட்கார்ந்திருந்தேன்.

பள்ளியின் வாயிலைவிட்டு வெளியே வந்தோம். எதிர் பக்கம் காய்கறி கடை ஒன்று உள்ளது. அங்கு நின்றிருந்த எதிரி எங்களை பார்த்தும் அங்கிருந்து எங்களை நோக்கி ஓடிவந்தார். பையில் வைத்திருந்து கொடுவாளை வெளியே எடுத்து ஓங்கிக்கொண்டே வந்தார். பள்ளி மாணவர்கள் கலைந்து சென்றதால் என் கணவரால் வேகமாக வண்டியை ஓட்ட முடியவில்லை. என் கணவர் வண்டியை நிறுத்தினார். எதிரி என் பிரச்சினையில் நீ தலையிடுவாயா என்று சொல்லி அசிங்கமாக திட்டினார். இன்றுடன் செத்துபோட என்று சொல்லி தலையில் வெட்ட கொடுவாளை ஓங்கி விசிறினார். என் கணவர் வலது கையால் தடுத்தார். கொடுவாள் அவரது உள்ளங்கையில் பலமாக வெட்டி காயம் ஏற்படுத்தியது. மீண்டும்

எதிரி அதே கொடுவாளால் வெட்ட விசிறினார். என் கணவர் மீண்டும் தடுத்தார். கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் நடுவில் வெட்டுப் -பட்டு கட்டை விரல் தொங்கியது. பிறகு எதிரி மீண்டும் வெட்ட கொடுவாளை விசிறினார். என் கணவர் வலது கையால் மீண்டும் தடுக்க பின்னங்கையில் வெட்டுப்பட்டது. ஒவ்வொரு முறை வெட்டும்போதும் நீ இதோடு செத்துத் தொலையடா என்று சொல்லி வெட்டினார். எனக்கு அதை பார்த்ததும் என் செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றேன். அருகில் இருந்த பள்ளி மாணவர்களையும் நெருங்க விடாமல் கொடுவாளை காட்டி விசிறினார். ஒரு நிமிடத்தில் சம்பவம் நடந்துவிட்டது. என் கணவரில் ஆடைகள் இரத்தத்தால் நனைந்துவிட்டன. என் கணவரும் நானும் சத்தம் போட்டதும் அருகில் இருந்தவர்கள் ஓடிவந்தனர். எதிரி கொடுவாளை என் கணவரை நோக்கி காட்டி இன்று நீ தப்பித்துவிட்டாய் என்றிருந்தாலும் உன் சாவு என் கையில்தான் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து சென்றார்.

என் கணவரின் தம்பிக்கு தகவல் சொன்னேன். அவருக்கு வேறு யாரோ தகவல் சொல்லியிருக்கிறார்கள். தனியார் அவசர ஊர்தியை வரவழைத்து அதில் என் கவணரை ஏற்றி சேலத்தில் உள்ள வள்ளி மருத்துவமனைக்கு கொண்டுவந்து சேர்த்தோம். அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

நான் மருத்துவமனையில் இருந்தபோது இரவு 08.00 மணியளவில் தொளசம்பட்டி காவல் நிலையத்தினர் அங்கு வந்தனர். என் கணவர் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் இருந்ததாலும் மயக்க நிலையில் இருந்ததாலும் என்னிடம் என்ன நடந்து என்று கேட்டு வாக்குமூலமாக எழுதிக்கொண்டார்கள். நான் அதை படித்துப் பார்த்துவிட்டு நான் அதில் கையொப்பம் போட்டேன். மறுநாள் ஆய்வாளர் என்னை விசாரித்தார். புகார்

வாக்குமூலம் **அ.சா.ஆ-01** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி வைத்திருந்தது மரம் வெட்டும் கொடுவாள்.

என் கணவரும் எதிரியும் ஒன்றாக படித்தவர்கள். என் கணவர் படித்து வேலைக்கு சென்றுவிட்டதால் அவர்மீது எதிரிக்கு பொறாமை. எதிரியின் தாயார் என் கணவரின் அத்தை. எதிரி அவருடைய தாயாரை ஒருமுறை அடித்தபோது என் கணவர் சென்று ஏன் அடிக்கிறார் என்று கேட்டார். என் பிரச்சனையில் எதற்கு தலையிடுகிறாய் என்று என் கணவரிடம் சண்டை போட்டார். எங்களை எங்கு பார்த்தாலும் எதிரி திட்டுவார்.

**குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் புகாரிலும் புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் ஆமாம். சிவக்குமாருடன் திருமணம் நடந்தபிறகுதான் நான் ஆசிரியர் பணியில் சேர்ந்தேன். திருமணத்தின்போது என் கணவர் ஆசிரியராக இருந்தார். ஆரம்பத்தில் நானும் என் கணவரும் வெவ்வேறு பள்ளிகளில் வேலை செய்தோம் என்றால் சரிதான்.

எனக்கு திருமணம் ஆனபோது என் கணவரின் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் சுமூக உறவு இருந்தது என்றால் சரிதான். நான் திருமணம் செய்துகொண்டு வந்தபோது எதிரியின் குடும்பம் வசதி குறைவானவர்களாக இருந்தார்கள். எதிரியின் தகப்பனார் தலைமை ஆசிரியராக பணிபுரிந்தவர் என்றால் சரிதான். எதிரியின் தாயார் அங்கன்வாடி ஊழியராக இருந்தார் என்றால் சரிதான். என் மாமியார் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். என் மாமனாரும் ஊதியம்

பெறும் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் குடும்பத்தி -னருக்கு விவசாய நிலங்கள் உள்ளது என்றால் இல்லை. எதிரியின் தகப்பனார் தலைமை ஆசிரியராக பணிபுரிந்ததால் அவர்தான் என் கணவரையும் அவரது சகோதர்களையும் பணம் செலவழித்து படிக்க வைத்தார் என்றால் இல்லை.

என் கணவரும் எதிரியும் ஆரம்பத்தில் B.Sc வேதியியல் படித்தவர்கள் என்றால் சரிதான். எதிரி அரசாங்க வேலைக்கு செல்லாவிடினும் விவசாய வேலைகளும் பிற வேலைகளும் செய்து நன்றாக வருவாய் ஈட்டினார் என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நானும் என் கணவரும் ஒரே பள்ளியில் பணிபுரிந்தோம் என்றால் சரிதான். என் வீட்டில் இருந்து பள்ளிக்கூடம் 500 மீட்டர் தூரத்தில் இருக்கும். எனக்கும் என் கணவருக்கும் தனிதனியாக இருச் சக்கர வாகனம் உள்ளது என்றால் சரிதான். இருவரும் தனிதனியாக வருவோம் என்றால் எனக்கு சிறப்பு வகுப்பு ஏதாவது இருந்தால் தனியாக வருவேன். மற்ற நேரங்களில் ஒன்றாகதான் வருவோம்.

பள்ளிக்கூடம் மாலை 04.15 மணிக்கு கலையும். சம்பவம் பள்ளியின் நுழைவு வாயிலில் நடந்தது என்றால் சரிதான். அந்த பள்ளிக்கூடத்திற்கு இரு நுழைவு வாயில்கள் உள்ளன என்றால் சரிதான். எந்த நுழைவு வாயிலில் சம்பவம் நடந்தது என்று நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சிறிய நுழைவு வாயிலுக்கு அருகில் நடந்தது.

பள்ளிக்கூடம் கலையும் நேரத்தில் அந்த இடத்தில் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றும் நான் சொல்வதுபோன்று சம்பவம் நடந்திருக்க வாய்ப்பு

இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பள்ளிக்கூடம் கலைந்து பெரும்பாலான மாணவர்கள் சென்றுவிட்டனர். கடைசியில் வந்தவர்களே இருந்தனர். என் கணவர் வண்டியில் இருந்து விழுந்தார என்றால் விழுந்தார். விழுந்தார் என்ற சங்கதியை முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

முதல்நாள் எதிரி வந்து மிரட்டியது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே அவர் மிரட்டி இருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்போம் என்றால் சரியல்ல. அவர் எப்போதுமே அவ்வாறு பேசுவதால் நாங்கள் அதை பெரிதுபடுத்தவில்லை. என்னை எதிரி கொடுவாளால் வெட்ட வரவில்லை. என் கணவரை வெட்ட வேண்டாம் என்று நான் தடுத்தேனா என்றால் இல்லை. பதட்டத்தில் விழுந்துவிட்டேன்.

நானும் என் கணவரும் சம்பவத்தன்று தனிதனி வாகனங்களில் வந்தோம் என்றும் என் கணவருடன் நான் ஒரே வாகனத்தில் செல்லவில்லை என்றும் சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றும் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.